செய்தி வெளியீடு எண். 921 நாள் –03.12.2009

## செய்தி வெளியீடு

கூவம் ஆற்றை சீரமைத்தல், வானூர்தி தொழிற்பூங்கா மற்றும் நிதிநகரம் ஏற்படுத்துதல் ஆகிய திட்டங்கள் தொடர்பாக சிங்கப்பூர் சென்று, சிங்கப்பூர் அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் மேற்கொண்ட ஆலோசனைகள் குறித்த விவரங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் இன்று (3.12.2009) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் விளக்கினார். அப்போது தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, தொழிற்துறை முதன்மைச் செயலாளர் திரு.எம்.எப். பரூக்கி, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.ராமசுந்தரம், துணை முதலமைச்சரின் செயலாளர் திரு.கே.தீனபந்து, கூவம் நதி நிர்வாக அலுவலர் திரு.க.பணீந்திர ரெட்டி, கூவம் நதி நிர்வாக பொறியாளர் திரு.காந்திமதிநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

கூவம் நதியின் இன்றைய நிலைக்குக் காரணமாகவுள்ள பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றியும், அவற்றை எவ்வாறு களைவது என்பது பற்றியும், சிங்கப்பூர் நதியைப் போலவே கூவத்தையும் மாற்றியமைத்திட தேவையான நடவடிக்கைகள் பற்றியும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விளக்கிக் கூறினார்கள். கூவம் உற்பத்தியாகும் இடமான திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கூவம் ஏரியிலிருந்து அது கடலில் கலக்கும் இடம் வரை மொத்தம் 65 கிலோ மீட்டர் நீளத்திற்கு செயல்படுத்தப்படவேண்டிய திட்டங்கள் பற்றியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக, கூவம் மற்றும் சென்னையில் உள்ள மற்ற நதிகளின் சீரமைப்புத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு முதற்கட்டமாக ‘‘சென்னை நதிநீர் ஆணையம்’’ என்ற தனி அமைப்பினை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஏற்படுத்துவதென்று முடிவெடுக்கப்பட்டது. இந்த அமைப்பில் மாண்புமிகு குடிசை மாற்று வாரிய அமைச்சர், மாண்புமிகு சுற்றுச்சூழல்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். உடனடியாக சீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9